


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 156

வெள்ளிக்கிழமை
01 மே 2026

சித்திரை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## நாகபூஷணி அம்பாளுக்கு இன்று தேர்த் திருவிழா!

யாழ்ப்பாணம், மே 1
வரலாற்றுப் பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் சீரணி நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம் »11

திஸ்ஸ விகாரைக்காக அபகரிக்கப்பட்ட

# வீதியைக் கையளியுங்கள் இல்லையேல் விடுவிப்போம்

## திஸ்ஸ விகாரைத் தேரருக்கு வலி.வடக்கு பிரதேசசபை கடிதம்

யாழ்ப்பாணம், மே 1
தையிட்டி பவானி வீதியினை தடைசெய்து இடப்பட்டுள்ள எல்லை வேலியை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்பதாக அகற்றுமாறும், இல்லையேல் பிரதேசசபை அந்த எல்லையை அகற்றும் என்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. »11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று மீண்டும் போராட்டம்!

இன்றும் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராக, பொதுமக்களும் ஆர்வலர்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள »11

செம்மணிப் புதைகுழியில்

## என்புத்தொகுதி நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், மே 1
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று ஒரு என்புத்தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் நான்காம் நாளான நேற்றைய தினமே, இந்த »11

சந்தேகத்துக்கு இடமான

## மண் படுக்கைக்குள் நாணயக்குற்றி மீட்பு

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் சந்தேகத்துக்கு இடமான மண்படுக்கைகள் நேற்றுமுன்தினம் அவதானிக்கப்பட்ட நிலையில், அதற்குள் இருந்து நேற்றையதினம் நாணயக் குற்றியொன்று மீட்கப்பட்டுள் »11

## தனியார் மருத்துவமனையில் நுளம்பு பெருகும் ஏதுநிலை!

தண்டம் விதித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மே 1
பருத்தித்துறை - புலோலி பகுதியில் நுளம்புக்கு ஏதுநிலையை ஏற்படுத்திய தனியார் மருத்துவமனைக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப் »11



## சட்டத்தரணியாக பேறறிவாளன்; காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்பு

தடை விதிக்குமாறும் கோரிக்கை

சென்னை, மே 1
பேரறிவாளன் சட்டத்தரணியாகச் செயற்படுவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று, இந்தியப் பிரதமர் மோடியிடம் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் »11

## இன்று இந்திர விழா!

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு, வல்வை மக்களால் பிரமாண்ட »11

விரிவுரையாளர் தயாளினி கொலைவழக்கு

## 2 சந்தேகநபர்களுக்கும் நீடிக்கப்பட்டது மறியல்!

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சித்தமருத்துவத் துறை விரிவுரையாளர் தயாளினி திலீபன் படுகொலை வழக்கில், சந்தேகநபர்களை மே மாதம் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு »11



## பரந்தனில் நேற்று மினிசூறாவளி!

இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கிளிநொச்சி, மே 1
கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் நேற்று வீசிய மினி சூறாவளி காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. »11

பருத்தித்துறை

## பனங்கூடலில் பற்றியது தீ!

நகரசபையின் நடவடிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு!

யாழ்ப்பாணம், மே 1
பருத்தித்துறை தும்பளை பகுதியில் உள்ள பனங்கூடலில் நேற்றுப் பெரும் தீப்பரவல் ஏற்பட்ட நிலையில், நகரசபையினரின் துரித நட »11



## தீயில் கருகிய நிலையில் மூதாட்டி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் - அராலிதெற்கு பகுதியில் வயோதிப பெண்ணொருவர் தீயில் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »11



பூச்சந்தி பூரணி

“பனங்கூடலில நெருப்பு தானா பத்தாது, பத்தியெறிவார் தான் பத்தவைச்சிருப்பினம் கண்டியளோ”

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4417 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 06 49 56 65 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1484 |
| வெற்றி இலக்கியம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 10 23 38 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0443 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 1 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2523 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 11 28 56 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6175 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 4 5 5 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2205 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 16 64 68 76 |
| விசேட எழுத்து | U |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0291 |
| வெற்றி இலக்கியம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 17 33 |

# மே தினத்துக்காக விசேட பாதுகாப்பு

கொழும்பு, மே 1
நாட்டின் பல பகுதிகளில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பும் போக்குவரத்துத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மே தின ஊர்வலங்கள், கூட்டங்கள் மற்றும் பல்வேறு விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிரதான கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் விழாக்கள் கொழும்பு நகரை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளன. அதேவேளை, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தினக் கொண்டாட்டங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறவுள்ளன.

இந்த மே தின நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்துவதற்கான சூழலை உருவாக்குதல், பாதுகாப்பு வழங்குதல், போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றுக்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)






| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0883 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 2 1 0 9 7 9 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3149 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 07 27 32 56 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 08 33 42 60 |
| வெற்றி வாரம் | 5310 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0979 |
| வெற்றி இலக்கம் | 21 28 30 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ராசி | துலாம் |
| வெற்றி இலக்கம் | 18 20 31 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4861 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கம் | 17 52 57 73 |
| வெற்றி வாரம் | 2325 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 30.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 03 44 59 70 |
| வெற்றி வாரம் | 2975 |

# இலங்கை கிரிக்கெட் நிறுவன மறுசீரமைப்புத் தலைவர் எரான்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் மறுசீரமைப்புப் பணிகளுக்கான 'மாற்றக் குழுவின்'தலைவராக எரான் விக்கிரமரத்னநியமிக்கப்பட்டுள்ளார் என்று விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் தமது பதவிகளில் இருந்து விலகினர். அவர்களின் பதவிவிலகைத் தொடர்ந்தே, எரான் விக்கிரமரத்ன தலைமையிலான இந்தப் புதிய நியமனம் விளையாட்டுத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)



# மின்சார ரயில் சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, மே 1
கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் மின்சார ரயில் சேவையை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கொழும்பு புறநகர் ரயில்வே திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக மருதானையிலிருந்து மாகும்புர வரையும் கொழும்புக் கோட்டையிலிருந்து ராகம வரையும், கொழும்புக் கோட்டையிலிருந்து பாணந்துறை வரையும் மின்சார ரயில் சேவையை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சாதாரண ரயில் சேவைகளுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி, அவற்றுக்கு இணையாகவே இந்த மின்சார ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அரச நிதி பற்றிய குழுவில் முன்னிலையாக முடியாது!

## திறைசேரிச் செயலாளர் மறுப்பு!

கொழும்பு, மே 1
மத்திய வங்கியின் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி விவகாரம் தொடர்பாக விளக்கமளிக்க, அரச நிதி பற்றிய குழுவில் முன்னிலையாக முடியாது என திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும அறிவித்துள்ளார்.



மத்திய வங்கியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்கான கடன் தவணையாகச் செலுத்தப்படவிருந்த 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, சைபர் ஊடுருவல் மூலம் திருடப்பட்ட சம்பவம் பெரும் அரசியல் மற்றும் நிதிச் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக, அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ச டி சில்வா முன்னிலையாகுமாறு திறைசேரி செயலாளருக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனினும் இந்தக் குழுக்கூட்டத்தில் தம்மால் கலந்துகொள்ள முடியாது என திறைசேரிச் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# டிஜிற்றல் மயமாகும் சுங்கத் திணைக்களம்

**கொழும்பு, மே 1**

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகளை நவீன மயப்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்றிட்டங்கள், நேற்று இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டன.**

சுங்க நடவடிக்கைகளில் வினைத்திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் நவீனமயமாக்கலை மேம்படுத்தும் நோக்கில் சரக்கு பரிமாற்ற கண்காணிப்பு முறைமை, சுங்கப் பணம் அனுப்பும் இணைய நுழைவாயில், மின்னணு கப்பல் சேவைக் கட்டண முறைமை போன்ற புதிய சேவைகள் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்வில் தொழிலாளர் அமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ச-இ)

# திருடனிடமே திருடிய பொலிஸ் அதிகாரி கைது



கொழும்பு, மே 1

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றில், திருடப்பட்ட பொருள்களைத் திருடனிடமிருந்து அபகரித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி வாழைச்சேனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 7 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 65 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டன.

இதுதொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நாவலடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட திருடனிடம் நடத்திய விசாரணையில், வாழைச்சேனையில் முன்னர் கடமையாற்றி, தற்போது மாற்றலாகிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், திருடனின் வீட்டுக்குச் சென்று இந்தத் திருட்டுக் குறித்து விசாரணை நடத்துவதாகக்கூறி, திருடனிடம் இருந்த நகைகளையும் பணத்தையும் மிரட்டி வாங்கிக்கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிளைக் கைதுசெய்த பொலிஸார் வாழைச்சேனை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## கஞ்சாவுடன் பெண் கைது

களுத்துறை, மே 1

பெருமளவிலான கேரளக் கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டுவந்த பெண் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குடா வஸ்கடுவ, ரத்னஜோதி மாவத்தையில் அமைந்துள்ள வீடு ஒன்றைச் சோதனையிட்டபோதே சந்தேக நபர் கஞ்சாவுடன் கைதானார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ 750 கிராம் கேரளக் கஞ்சா, 110,000 ரூபா பணம் மற்றும் மின்சாரத் தராசு ஒன்று என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## 32 கிலோ மாட்டிறைச்சியுடன் முச்சக்கரவண்டிச் சாரதி கைது



யாழ்ப்பாணம், மே 1

அனுமதியின்றி முச்சக்கரவண்டியில் பெருந்தொகை மாட்டிறைச்சியைக் கொண்டுசென்ற நபர் முள்ளிப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரியில் உள்ள மாட்டு இறைச்சிக் கடை ஒன்றில் இருந்து ஹலால் செய்யப்பட்ட இறைச்சியை பருத்தித்துறையில் உள்ள முஸ்லிம் உணவகம் ஒன்றுக்கு இவர் வழக்கமாகக் கொண்டு செல்பவர். சம்பவத்தன்று 24 கிலோ மாட்டு இறைச்சியையும், 7 1/2 கிலோ மாட்டுக்குடலையும் முச்சக்கரவண்டியில் எடுத்துச் சென்ற போது, முள்ளிப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சாரதியிடம் இறைச்சியைக் கொள்முதல் செய்ததற்கான பற்றுச்சீட்டு இருந்தபோதிலும், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவில் மாட்டு இறைச்சியை எடுத்துச்சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-100)

## ஜனாதிபதி உரையின் பின்னரே திறைசேரிச் செயலர் முன்னிலை

### அரசாங்கம் விளக்கம்

கொழும்பு, மே 1

திறைசேரிச் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும அரச நிதி பற்றிய குழுவில் முன்னிலையாவதைத் தவிர்க்கவில்லை. ஜனாதிபதியின் விசேட உரைக்காகவே அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை பிரதி அமைச்சர் கௌசல்ய ஆரியரத்ன விளக்கமளித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த சைபர் தாக்குதல் மற்றும் நிதி கையாடல் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். ஜனாதிபதி இது குறித்து உத்தியோகபூர்வமாகச் சபையில் அறிவிப்பதற்கு முன்னர், திறைசேரிச் செயலாளர் குழுவின் முன்னிலையில் இதுதொடர்பான விவரங்களை வெளியிடுவது பொருத்தமானதல்ல என அரசாங்கம் கருதுகிறது - என்றார். (ச-இ)

## துவக்கும் வழக்கும்!

**குதிரையின்ர குணம் தெரிஞ்சுதான் கடவுள் அதுக்குக் கொம்பு குடுக்கேலை எண்டு ஒரு பழமொழி சொல்லுவாங்கள். ஒருவேளை குதிரைக்குக் கொம்பு முளைச்சால் என்ன நடக்கும் எண்டதைப் பாக்க வேணும் எண்டால், ஊசிக்கார எம்.பி.யைப் பாத்தாலே காணும். 'எனக்குப் பாதுகாப்பில்லை' எண்டு அந்த ஊசிக்காரர் அழுது குளறி. ஒருமாதிரி துவக்கொண்டை அரசாங்கத்திட்ட இருந்து வாங்கினதும் காணும் அதை வைச்சுக்கொண்டு அவர் படுத்திற பாடும் காணும் எண்ட நிலைக்கு சனங்கள் வந்திட்டினம்.**

**ஒராளுக்கு அவரின்ர பாதுகாப்புக்குத் துவக்கைக் குடுத்தால், அதை அவர் பப்ளிக்கா காட்டக்கூடாது. இரகசியமா வைச்சிருக்கோணும். அதைவிட அந்தத் துவக்கைத் தன்ர உயிர் போற அபாய நிலைமை வந்தால் தான் பாவிக்கோணுமே தவிர, அந்தத் துவக்கை வைச்சு மற்றவையை வெருட்டுறதோ, தன்ர சொல்லுப்படி நடக்கவைக்கிறதோ பிழையான வேலை. அதுக்குச் சட்டத்திலையும் இடமில்லை. 'உன்னைச் சுடுவன், கொல்லுவன்' எண்டு சொல்லிக்கொண்டு ஆருக்கும் துவக்கை காட்டினால் அதைப் பாரதூரமான குற்றமாக் கருதி, கடும் தண்டனையும் குடுக்கலாம் எண்டு சட்டம் சொல்லுது. ஆனால் ஆத்திரக்காரனுக்கு மட்டுமில்லை ஊசிக்காரருக்கும் புத்தி மட்டு எண்டபடியால எல்லாத்துக்கும் துவக்கை எடுத்துக் காட்டி மற்றவையின்ர வாயை அடக்கிறதுதான் வேலையா இருந்திருக்கு. அதோட இயக்கப்பெடியள் முந்தி இடுப்பில பிஸ்டலைச் செருகிக் கொண்டு திரியிறமாதிரி இந்த ஊசிக்காரரும் சேர்ட்டுக்கு வெளியால தள்ளிக்கொண்டு தெரியிற மாதிரி துவக்கை இடுப்பில செருகிக் கொண்டு படம் காட்டிக்கொண்டு திரிஞ்சவர்.**

**காணிப்பிரச்சினைக்கும் அப்பிடிப் படம் காட்டி, அந்தப் பொம்பிளையளை அடக்க நினைச்சு கடைசியா அது அவரின் துவக்குக்கே ஆப்பாப் போட்டுது. காணிப்பிரச்சினையால கொளுவுப்பட்ட பொம்பிளைக்கு ஊசிக்காரர் துவக்கை எடுத்துக்காட்டிப்போட்டு, முந்திக்கொண்டு ஓடிப்போய் அந்தப் பொம்பிளை தனக்கு கல்லால எறிஞ்சு போட்டா எண்டு முறைப்பாடு செய்திட்டார். ஆனால் எதிர்பார்ட்டியும் லேசான ஆக்கள் இல்லை. ஊசிக்காரர் எல்லாருக்கும் வீடியோ போட்டு வினையைக் குடுக்கிற அதே பிளானில, இவர் அவைக்கு அடிச்சது, உதைஞ்சது, துவக்கைக் காட்டி 'உன்னைச் சுடுவன்' எண்டு சொன்னது எண்டு ஒண்டும் விடாமல் முழுக்க வீடியோ எடுத்திட்டினம். இப்ப அந்த வீடியோ தான் ஊசிக்காரருக்கு எதிரான பெரிய ஆதாரமா மாறிட்டுது. அதால ஆளைப்பிடிச்சு அவரின்ர துவக்கை வாங்கி வைச்சிட்டு, இப்ப பிணையில வெளியில விட்டிருக்கு நீதிமன்றம். ஏற்கனவே நீதிமன்றத்தில ஊசிக்காரருக்கு எதிரா ஊரிப்பட்ட வழக்கு இருக்கு. அப்பிடி எக்கச்சக்கம் வழக்கு வாங்கிக் கொண்டிருக்கிறவருக்கு துவக்கைக் குடுக்கலாமோ எண்டு அரசாங்கம் ஒருக்கா யோசிச்சிருந்தாலே இப்பிடியெல்லாம் சிக்கல் வந்திருக்காது. இனியாவது அந்தத் துவக்கை வாங்கிப்போட்டு, ஊசிக்காரர் துவக்கை வைச்சிருக்க குடுத்த லைசென்ஸை நிப்பாட்டிறதுதான் நாட்டுக்கும் நல்லது, சனத்துக்கும் நல்லது கண்டியளோ.**

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
சிவமயம்

உ
ஓம் சக்தி



நாரந்தனை சரவ

# ஸ்ரீ வள்ளி தேவசேனாத சமேத

# நூதன பஞ்சதள இராஜகோபு

# மஹாகும்பாபிஷே

## இன்று (01.05.2026) வெள்ளிக்கிழமை

### ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை



அகில புவனங்கள் எல்லாம் பரிபாலித்தருள் பொழியும் எங்கள் நாரந்தனை முருகப்பெருமானின் மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பது பெரும் மகிழ்வைத் தருகின்றது. குன்று தோறாடும் குமரன் நாரந்தனைக் கிராமத்தில் குடிலில் வீற்றிருந்து இப்போ பஞ்சதள இராஜ கோபுரத்திருக்கோவிலில் வீற்றிருப்பது அடியவர்கள் இயற்றிய பெரும் பக்தியின் பலனே எனலாம். எம் பெருமானின் கார்த்திகை, ஷஷ்டி சங்கிராந்தி மற்றும் ஸ்கந்தஷஷ்டி, வருடாந்த மஹோற்சவம் போன்ற விழாக் காலங்களில் ஆலயத்தில் பெரும் பஜனை வழிபாடும், படையல் செயற்பாடும் என்றும் குறை வின்றி நடைபெற்று வருகின்றது. இளம் சமூகத்தினரிடத்தில் சைவ மரபு வாழ்வியலை மேம்படுத்தும் வகையில் பரீட்சை வைத்து பரிசில்கள் வழங்குவதின் ஊடாகவும் அன்னதானப்பணியின் ஊடாகவும் சமூகப்பணியையும் எமது ஆலயம் ஆற்றி வருகின்றது. கருங்கல் அடித்தளமாக கொண்ட பஞ்சதள இராஜகோபுரம், நூதன தண்டாயுதபாணி கூரை வேலை, உள்வீதி தெராசோ அமைப்பு என பெரும் திருப்பணியை இம்முறை அடியவர்கள் செய்திருக்கிறார்கள் "எண்ணம் போல் வாழ்வு" என்பது போல இப்பெரும் திருப்பணிக்கு உதவி செய்தவர்களின் வேண்டுதல்கள் நிறைவேற முருகனைப் பிரார்த்திப்பதோடு, மிகமிக குறுகிய காலத்திலும் மனதில உறுதிகொண்டு திருப்பணி வேலைகளையும், மஹா கும்பாபிஷேகத்தையும் ஆற்ற வழி சமைத்த பரிபாலன சபையினர் மற்றும் திருப்பணிச் சபையினரையும் பாராட்டுவதோடு பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும், தேவலோக தரிசனக் காட்சிபோல நடைபெற என ஆசிகளையும் வழங்கி கும்பாபிஷேக மலர் நாரந்தனை முருகன் பக்தி மணம் வீச வாழ்த்தி அமைகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

**பிரதிஷ்டா பிரதம குரு**
**"சிவாகம கிரியா திலகம்"**
**சிவஸ்ரீ கா. புவனேஸ்வரக்குருக்கள், (நாரந்தனை, சரவணை, கர்ணந்தோட்டம் ஆலயம்) (கொக்குவில்)**

### சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் J.P ஆசியுரை



"துர்லபம் மானுஷம ஜன்ம்" என்கின்ற ஆகம வசனமும் அரிது அரிது மானுடர் ஆவதரிது" என்ற வாக்கியமும் உலகிலே சிறந்த பிறவி மானுடப்பிறவியே என்பதை எமக்கு உணர்த்துகின்றன. புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவியை எடுத்த நாம் மாபெரும் புண்ணியம் செய்தவர்களாவோம். வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறைகள், திருமந்திரம் மற்றும் சாஸ்திர நூல்கள் யாவும் இந்த உலகில் நீக்கமற வியாபித்திருக்கின்ற முழுமுதற் கடவுளாகிய இறைவனைப் புரிந்துகொண்டு அவரின் திருவடிகளை அடைதற்கொருட்டே இம் மானிடப் பிறவி கிடைத்தது என்பதை எமக்கு விளக்கமாக உணர்த்துகின்றன.

"தெய்வக்குஹா சில்பிஹி மந்திரக்குஹா
சிவாச்சார்யா தனக்குஹா தர்மகர்த்தா"

ஓர் ஆலயத்தை சிவாகம சிற்ப சாஸ்திர முறைகளின்படி உபானம் முதல் விமானம் வரையுள்ள சிற்பலட்சணங்களுடன் ஆலயத்தையும் அதில் சொல்லப்பட்ட திருவுருவங்களை வரம், சாந்தம், உக்ரம், சிருங்காரம் முதலான நவரச பாவங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் அமைப்பதுடன் அழகுமிகு காட்சிகள் வர்ண வேலைகளால் மெருகேற்றுதல் சிற்பாச்சாரியார்களின் பணி. மந்திரங்கள் கிரியை, பாவனை மூலம் ஆவாஹனாதி பூஜைகளைப் பக்திசிரத்தையுடன் நடாத்துதல் சிவாச்சார்யர்களின் பணி திருப்பணி செய்வித்து யாகசாலைகளை அமைப்பித்து அபிஷேக, ஹோமத்திரவியங்கள் தக்ஷிணை, அன்னதானம் என்பவற்றிற்கு நிதி உதவிகளை வாரி வழங்கி மஹாகும்பாபிஷேகத்தையும் நடத்துதல் ஆயை பரிபாலன தர்மகர்த்தா, பக்தப் பெருமக்களின் பணி அந்த வகையிலே நாரந்தனை சிவ சுப்பிரமணியர் ஆலயமும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பற்பல திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன. இம்முறை கருங்கல்லினாலான அடித்தளத்தைக்கொண்டு பஞ்சன இராஜபோபுரம் பெரும் திருப்பணியை ஊர் மக்களுக்கு புலம்பெயர்ந்து பல தேசங்களில் வாழும் அடியவர்களும் செய்திருக்கிறார்கள். நிதி வழங்கியவர் களுக்கும், ஆலோசனை நல்கியவர்களுக்கும், பரிபாலன சபையினருக்கும், திருப்பணிச்சபையினருக்கும், கலைஞர் பெரு மக்களுக்கும் முருகன் திருவருள் பொழிய பிரார்த்தித்து, மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற நல் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

**அன்பே சிவம்**
**சிவஸ்ரீகுமார சரவணபவக் குருக்கள்**

### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



"வேலுண்டு வினையில்லை" அருள் நிறைந்த நாரந்தனை சரவணை கருணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புதுப்பொலிவு பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். சைவ மக்களின் வாழ்வில் ஆலயங்கள் முதன்மையானவை. ஆலயங்களை காலத்துக்குக் காலம் புதுப்பித்து திருவருளைக் காக்கும் பணி புனிதமானது. கும்பாபிஷேகம் சிறக்கவும் பக்தர்கள் சகல சிறப்புக் களுடனும் வாழ இறைவருளை வேண்டி அனைவர்க்கும் நல்லாசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்.**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை, தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**

### வாழ்த்துச் செய்தி



விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

வேண்டும் அடியாவர்க்கு வேண்டும் வரம் அருளும் வேலவன், நாரந்தனை, சரவணை, கர்ணந்தோட்டம் திருப்பதியிலே, ஸ்ரீ வள்ளி தேவசேனாத சமேத சிவசுப்பிரமணிய சுவாமியாகத் திருக்கோலம் கொண்டு அருளாட்சி செய்யும் அழகினைக் காண யாம் என்ன தவம் செய்தோமோ! அண்ணலவன் அருளாட்சித் திருத்தல மகா கும்பாபிஷேக நன்னாளிலே வெளிவருகின்ற சிறப்பு மலர் வெளியீடு இனிதே நிகழ்ந்தேற இறையாசி வேண்டி வாழ்த்துவதோடு விழா, மலர்க் குழுமத்தையும் அகமகிழ்ந்து பாராட்டி அமைகிறேன்.

**ய.அநிருத்தனன்**
**பணிப்பாளர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரின் தெற்கே தீவகம் என்று அழைக்கப்படும் ஊர்காவற்றுரையில் அமைந்த நாரந் தனைக் கிராமத்தில் கர்ணந்தோட்டப் பகுதியில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமிக்கு நூதன பங்க்ஷள இராஜகோபுர சகித நவகுண்ட பக்ஷ பிரதிஸ்டா மகா கும்பிஷேகம் நடைபெறுவதனையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துசெய்தி வழங்க கிடைத்த பாக்கியம் பெரு மகிழ்வை தருகிறது. நாரந்தனை சரவணைக் கிராமத்தில் வசிக்கும் இந்து மக்களால் மிகவும் பத்தியுடன் வழிபடும் இவ்வாலயம் நாரந்தனை சரவணா கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் என பெயர் பெற்று விளங்குகிறது. இவ்வாலயத்தில் சுமார் நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு ஆகம விதிப்படி அந்தணர்களால் பூசை செய்து வழிபடுவது மிகவும் சிறப்பு பெற்று விழங்குகிறது. இவ்வாலயத்தில் எனது அறிவுக்கு எட்டிய வகையில் நான்கு பெரிய மகாகும்பிஷேகமும் ஒரு சம்பூரண கும்பாபிஷேகம் நடைபெற்று தற்போது இராஜகோபுரத்தின் கூடிய மகாகும்பாபிஷேம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது பரந்த உள் வீதியிலும் பல மர விருட்சங்களுடன் கூடிய மிகவும் நீளமான வெளி வீதியுடன் அமையப்பெற்று இவ் ஆலயம் சிறப்புபெறுவதுடன் மூன்றாம் வீதி அமையக்கூடிய நிலப்பரப்பளவுடன் அமையும் காணிகளை கொண்டுள்ளது. சித்திரத்தேர் அமையவேண்டும் என்ற நாரந்தனை, சரவணை கிராம மக்கள் சித்தித்து 2012 ஆம் ஆண்டு சித்திரத் தேர் அமைத்தனர். அதே போன்று இராஜகோபுரம் அமைய வேண்டும் என்று எண்ணி இரு கிராம மக்களும் புலம்பெயர்ந்து வாழும் மக்களும் கொண்ட ஆசை 2026.05.01 வெள்ளிக்கிழமை இன்று (சித்திரா பௌர்ணமி) நிறைவேறுவதனையெட்டி மிகவும் மகிழ்வுற்று கும்பாபிஷேக மண் சிறப்புற வாழ்திகிறேன்.

சுபம்

**க.சகாதேவன்**
**தலைவர், ஆலய பரிபாலனசபை, ஓய்வுநிலை கிராம அலுவலர்.**

### ஆலய இராஜ கோபுர திருப்பணிச் சபைத் தலைவரின் வாழ்த்துரை



கனவுகள் நனவாகிய மகிழ்ச்சியில் பல்லாண்டுகளாக எம் மனதில் நிலைகொண்டிருந்த எண்ணங்கள் நிஜமாகி நாரந்தனை சரவணை கர்ணந் தோட்ட சிவசுப்பிரமணிய பெருமானின் பஞ்சதள இராஜ கோபுர சகித நவகுண்ட பிரதிக்ஷ்டா மகாகும்பாபிஷேகம் காணுகின்ற அற்புத நாள் சுப தினத்திலே முருகப்பெருமானுக்கு ஐந்து தளங்களை கொண்டு கருங்கற் திருப்பணியாக மூன்றாண்டுகளுக்குள் முத்தான கோபுரம் முகிழ்ந்து எழுந்திருக்கின்றது. இந்நன்னாளில் விசேட மகாகும்பாபிஷேக மலரொன்று வெளியிடுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆலயங்களின் வரலாறுகள் நூலாக வெளிவருகின்ற போது இக்கோயில் பற்றிய தகவல்களையும் மற்றவர்களும் அறிந்து கொள்ளக்கூடிய பதிவுகளாக இவை அமைந்து விடுகின்றன. அழகிய வேலைப்பாடுகளுடன் சிவ சுப்பிரமணிய பெருமானின் பல்வேறு புராண இதிகாசக் கதைகளுடன் கூடிய வகையில் சிற்பங்கள் அமைக்கப்பட்டு சைவ் ஆகமங்களின் பிரகாரம் இராக கோபுரமானது அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பாக திருவருள் சுரந்து கிராம மக்களின் சிறப்பும் வளமும் பெருகிக் முருகனின் அருளாசியும் எட்டுதிக்கும் பெற்று வளம் பெருகட்டும். முருகப்பெருமானின் அடியார்கள் காலத்திற்கு காலம் திருப்பணிகள் பலவற்றை பல இலட்சம் ரூபா செலவில் செலவிட்டு முருகப் பெருமானுக்கு பல திருப்பணிகளை செய்து வருகின்றனர். அந்த வகையில் இப்பாரிய திருப்பணியை நிறைவேற்ற உதவிய அனைத்து அடியார்களுக்கும் எம் பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்கப்பெற பிராத்திக்கின்றேன்.

**சின்னையா நடேசமூர்த்தி**
**இராஜகோபுர திருப்பணிச்சபை**

### வாழ்த்துச்செய்தி




உதித்தாங்(கு) உழல்வதும் சாவதும் தீர்த்தென உன்னிலொன்றா
வித்தாங்(கு) அருள்தரும் காலமுண்டோ, வெற்பு நட்(டு) உரக
பதித்தாம்பு வாங்கி நின்(று) அம்பரம் பட்டுழல
மதித்தான் திருமுருகா! மயில் ஏறிய மாணிக்கமே!

முத்து, மலைகள், கடல்வளம் என இயற்கைஎழில் கொஞ்சும் இலங்கைத்திருநாட்டிலே பாரம்பரிய கலை கலாச்சார வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் குடா நாட்டின் புகழ்பூத்த நாரந்தனை கிராமத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் புதிதாக நிர்மாணிக்கபபட்டு பராபர வருடம் சித்திரைத்திங்கள் 18ஆம் நாள் (01.05.2026) வெள்ளிக்கிழமை அன்று கும்பாவிஷேகம் காணும் ஸ்ரீ சிவசுப்பிரமணியரின் பெருமைமிகு கும்பாவிஷேக பெருநிகழ்விற்கு வாழ்த்துச்செய்தி வழங்க கிடைத்த இப்பெரும்பாக்கியத்தினை எண்ணி அகம் குளிர்வதுடன் கந்தனவன் பாதம் பணிகின்றேன். ஆலயத்தின் மூலவர் சிலையின் தெய்வீகத்தன்மையை புதுப்பித்து ஆலயத்திற்கு ஆன்மீக மற்றும் நேர்மறை ஆற்றலை அதிகப்படுத்துவதனை நோக்கமாக கொண்டு பொதுவாக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப்படும் இத்தெய்வீக சடங்கு இன்று எமது நாரந்தனை சரவணை கர்ணந்தோட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலும் இடம்பெற திருவருள் கூடியுள்ளமை நாரந்தனை சரவணை மக்கள் செய்த புண்ணியமே எனலாம். கும்பங்களின் வழியாக அபிஷேகம் நிகழ்த்தப்படுவதனால் குடமுழுக்கு அல்லது கும்பாவிஷேகம் என அழைப்படும் இச்சிறப்பு வாய்ந்த சடங்கில் ஒருவர் கலந்துகொள்வதால் குடும்பத்தில் செழிப்பு, மன அமைதி, சமூக ஒற்றுமை, கலாச்சார பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைப்பெரும் பேறும் கிடைக்கின்றது. அத்துடன் எமது பாவங்கள் நீங்கி முப்பத்துமுக்கோடி தேவர்களின் ஆசியும் கிடைப்பதாக ஐதீகம். இச்சடங்கில் யாகசாலை பூஜைகள், ஸ்தாபனம், புனித நீர் அபிஷேகம், கலச ஆராதனை போன்றன சில குறிப்பிடத்தக்க சடங்குகள் முக்கியமானவை. பொதுவாக கும்பாவிஷேகம் ஆவர்த்தம், அனாவர்தம் என இரண்டாக பகுத்து நோக்கப்படும். புதிய கோவிலில் இறைவனை பிரதிஸ்டை செய்தல் ஆவர்த்தம் எனவும் சேதமடைந்த கோவில் புனரமைக்கப்பட்டு மறு பிரதிட்டை செய்தல் அனாவர்தம் எனவும் அழைக்கப்படும். தமிழ் கடவுள் கந்தன் அருள் கிடைத்தால் கவலைகள் மறந்தோடும் என்ற வாக்கிற்கு இணங்க பஞ்சபூதங்களான நிலம், நீர் ஆகாயம், தீ, காற்று முதலியனவற்றினை இணைத்து மேற்கொள்ளப்படும் இச்சடங்கினால் கிடைக்கும் சிறப்புக்களும் பலன்களும் நாரந்தனை மக்களுக்கு மட்டுமன்றி உலகப்பெரும் மக்களுக்கும் பரவிக் கிடைக்கவேண்டுமென கிடைக்கவேண்டுமென ஸ்ரீ சிவசுப்பிரமணியரின் பாதங்களை பணிந்து வேண்டிக்கொள்வதுடன், அவன் நாமம் பரவும் மகிமை கொண்ட கும்பாவிஷேச நிகழ்வு சிறப்பாக நடைபெற வேண்டி எனது வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்..

**எந்திரி.சி.விகிர்தன்**
**மேலதிக மாகாண பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வட மாகாணம்**



### ஆலயத்தின் வரால

இலங்கையில் வடபால் அமைந்த யாழ்ப்பாண திருநாட்டின்
பெருநிலப்பரப்பில் நடு நிலப்பரப்பில் நாரந்தனை கிராமத்தின் கிழக்
எல்லையிலும், கர்ணந்தோட்டத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்
மூதாதையின் தகவல்களின்படியும் அரச ஆவணமான உறுதியில
நிலப்பரப்பில் வாழ்ந்துவந்த பசுமாடுகள் வைத்திருந்த இரு குடு
பகையுணர்வு முற்றியவேளையில் இவ்வாறு அமைந்துள்ள ப
வாய்த்தர்க்கம் முத்தி சச்சரவுகள் ஏற்பட்ட நிலையில் இரவு முரு
தனக்கு ஆலயம் ஒன்று அமைத்து வழிபட வேண்டும்
ஆலோசனைப்படி இவ்வாலயம் அமைந்ததாக வரலாறு உண்டு
கிழக்குப்பக்கமாகவும் சரவணைக் கிராமத்தின் மேற்குப்பக்க
கிராமத்தின் பிரிவும் இன்று மக்கள் வழிபடத்தொடங்கிய காரண
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் என பெயர்பெற்று விளா
உறவினர்கள் இவ் ஆலத்தை அமைத்து பராமரித்து நித்
மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. குறிப்பிடத்தக்கது. இவ்வா
வரும் வேளையில் 1940 ஆம் ஆண்டு அளவில் நாரந்தனை சர
ஒன்று கூடி ஆலயத்தில் கூட்டம் ஒன்றை கூட்டி ஆலோசனை
பகிர்ந்து பொது மக்களிடம் ஒப்படைப்பது என தீர்மானித்து பரி
தெரிவுசெய்யப்பட்டனர்.

1940 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆலய பரிபாலனசபை பொற
கும்பாபிஷேகம் செய்து வழிபடத்தொடங்கினர். ஆலயம் வளர்ச்சி
குடும்பங்கள் ஊடாக நடைபெற்று வரும் வேளையில் காலப்
கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலய வளர்சியின் பிரகாரம் கர்
அமைய வேண்டும் என பரிபாலன சபை பொதுக்கூட்டத்தில் தீர்
பெற்று புதிய சித்திரத்தேருக்குரிய மரங்கள் பெறப்பட்டு தேரு
அமரசிங்கம் அவர்கள் பொறுப்போற்று புதிய சித்திரத்தேர் அ
ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக மக்கள் அனைவரும் இடம்
ஆலயம் பூசையின்றி ஆறு ஆண்டுகள் கடந்தவேளையில் 199
குடியமர்வு காரணமாக குறிப்பிட்ட மக்கள் மீளக் குடியமர்ந்த
ஆண்டு இருந்த நிர்வாக சபையினர் சம்பு ரோக்ஜன கும்பாபிஷே
2002 ஆம் ஆண்டு மீண்டும் மிகப்பெரிய கும்பாபிஷேகம்
ஆரம்பிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் நடை
வருகிறார். மீண்டும் 2014 ஆம் ஆண்டு கட்டுமானப்பணிகள்
பிரகாரகோவில்கள் அமையப்பெற்று 2014 ஆம் ஆண்டு குப்பா
கூடி இராஜ கோபுரம் அமைக்க இராஜகோபுர திருப்பணிச் சபை
உள் வீதிகள் புனரமைக்கப்பட்டன 2026 ஆம் ஆண்டு கும்பா
நிர்ணயித்து 2026.05.01 இல் வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# டிஜிற்றல் பாதுகாப்பு இனி அவசியம்!

இலங்கைத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் செலுத்தப்படவேண்டிய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு, மூன்றாம் தரப்பு 'ஹக்கர்களால்' திசைதிருப்பப்பட்டு கையாடப்பட்ட செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கான மற்றொரு கொடுப்பனவைத் திசைதிருப்ப மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது முயற்சியின் போதே இந்தப் பெரும் மோசடி அம்பலமாகியுள்ளது. நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஒரு நாட்டுக்கு, இவ்வாறான தொழில்நுட்பக் கசிவுகள் வெறும் பண இழப்பு மட்டுமல்ல, நாட்டின் நிதி நிர்வாகத்தின் நம்பகத்தன்மை மீதான பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடும்.

இந்தச் சம்பவம் இலங்கையின் டிஜிற்றல் பாதுகாப்புத்தரம் மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகளின் தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றின் மீது பலமான கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளது. உலகமே டிஜிற்றல் மயமாகி வரும் சூழலில், நிதிப் பரிமாற்றங்கள் அனைத்தும் கணினித் திரைகளுக்குப் பின்னால் நகர்கின்றன. ஆனால், இந்தப் பாதுகாப்பு வளையத்தை ஊடுருவி, பல மில்லியன் டொலர்களைக் கொள்ளையடிக்க முடியும் என்பது நமது கணினிப் பாதுகாப்புக் கட்டமைப்பில் உள்ள பலவீனத்தையே பறைசாற்றுகின்றது.

இலங்கையை டிஜிற்றல் மயமாக்கும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆனால், அதன் அடிப்படை அத்திபாரம் என்பது உறுதியான டிஜிற்றல் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு வீட்டுக்குள் பெறுமதியான பொருள்களைச் சேகரிப்பது எவ்வளவு ஆபத்தானதோ, அதே போன்றதுதான் முறையான பாதுகாப்புப் பொறிமுறையின்றி அரச நிர்வாகத்தை டிஜிற்றல் மயமாக்குவதும் ஆகும். தற்போதைய சூழலில், அரசாங்கத்தின் மீது நேரடிப் பழி சுமத்துவதைவிட, அரச இயந்திரத்தின் இயலாமையையே இந்தச் சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது. நிதிப் பரிமாற்றங்களைக் கையாளும் உயர்மட்ட அதிகாரிகள் டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் போதிய தேர்ச்சி பெற்றிருக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மின்னஞ்சல் மோசடிகள், தரவுக் கசிவுகள் மற்றும் நிதித் திசைதிருப்பல்கள் எவ்வாறு நிகழ்கின்றன என்ற அடிப்படை அறிவு அதிகாரிகளிடம் இல்லாத பட்சத்தில், இவ்வாறான மோசடிகளைத் தடுப்பது கடினமாகவே இருக்கும்.


அரசாங்கம் இந்தச் சம்பவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாவதாக, அரச திணைக்களங்களின் டிஜிற்றல் உட்கட்டமைப்பை நவீனப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, நிதி மற்றும் நிர்வாகப் பொறுப்புகளில் உள்ள அதிகாரிகளுக் குத் தொடர்ச்சியான டிஜிற்றல் தொழில்நுட்பப் பயிற் சிகளும், விழிப்புணர்வுத் திட்டங்களும் வழங்கப்பட வேண்டும். தொழில்நுட்ப அறிவு என்பது இன்றைய காலக்கட்டத்தில் ஒரு மேலதிகத் தகுதியல்ல, அது ஒரு அத்தியாவசியத் தகுதி என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். டிஜிற்றல் மயமாக்கல் என்பது வெறும் கணினிகளை வழங்குவது மட்டுமல்ல, அந்தக் கணினிகளுக்குப் பின்னால் இருக்கும் மனித மூளைகளுக்குப் பாதுகாப்பு அறிவைப் புகுத்துவதும் ஆகும். நாட்டின் திறைசேரி என்பது பொதுமக்களின் வரிப்பணமும் நாட்டின் கௌரவமுமாகும். அதை 'ஹக்கர்களிடம்' பறிகொடுப்பது போன்ற அவமானங்கள் இனி நிகழாமல் இருக்க, அரசாங்கம் டிஜிற்றல் பாதுகாப்பைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாக மாற்றவேண்டும்.



## பொய்யாமொழி

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது**

**பொருள்:** தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறர் தனக்குச்செய்தஉதவிக்குமண்ணுலகையும்விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது..




## தொலைபேசிச் சேவைத் தரத்தை உயர்த்த புதிய ஒழுங்குமுறைமை

கொழும்பு, மே 1

கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, இந்த வருட இறுதிக்குள் புதிய சுயாதீன ஒழுங்குமுறை முறைமையொன்றை நிறுவ இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது தொலைத்தொடர்பு இணைப்பு மற்றும் அதன் தரம் குறித்த தரவுகளைப் பெறுவதற்கு, சேவை வழங்கும் நிறுவனங்கள் வழங்கும் தகவல்களையே ஆணைக்குழு முழுமையாக நம்பி யிருக்க வேண்டியுள்ளது.

புதிய முறைமையின் ஊடாக, சேவை வழங்குநர்களின் தரவுகளுக்கு அப்பால், ஆணைக்குழு நேரடியாகவும் சுயாதீனமாகவும் சேவையின் தரத்தைக் கண்காணிக்க முடியும் என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், எயார் வைஸ் மார்ஷல் பண்டார ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் டிஜிற்றல் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், இந்த ஆண்டுக்குள் இந்த வேலைத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)



## கோதுமை மா விலையேற்றம்

யாழ்ப்பாணம், மே 1

கோதுமை மாவின் விலை நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ப்ரீமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

ப்ரீமா நிறுவனத்தின் கோதுமை மா ஒரு கிலோகிராம் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்புக்கமைய இதற்கு முன்னர் 220 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் புதிய விலை 225 ரூபாவாகும்.

போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளமையே இந்த விலை உயர்விற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தாய்லாந்தில் பதுங்கிய தேரர்களுக்கு வலைவீச்சு

கொழும்பு, மே 1

தாய்லாந்தில் தங்கியிருந்தவாறு போதைப்பொருள் வலையமைப்பை இயக்கி வந்த இரு தேரர்கள் பிரதான குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. தாய்லாந்திலிருந்து 110 கிலோகிராம் போதைப்பொருளைக் கடத்தி வந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட 22 இளம் பிக்குகளிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்தக் கடத்தல் வலையமைப்பின்

பின்னணியில் உள்ள பிரதான சந்தேகநபர்கள் நபர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பள்ளத்தில் வீழ்ந்த பேருந்து 34 பேர் காயம்; ஒருவர் பலி

டிக்கோயா, பட்டல்கல பகுதியில் சுமார் 25 அடி பள்ளத்தில் கவிழ்ந்து தனியார் பேருந்தொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 34 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் 17 ஆண்கள், 14 பெண்கள் மற்றும் 2 சிறுவர்களும் அடங்குகின்றனர். மற்றுமொரு பேருந்துக்கு வழிவிட முற்பட்ட போது, கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியை விட்டு விலகி சுமார் 25 அடி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது. (ச-இ)



## இஸ்ரேலிய தூதுவருடன் விஜித ஹேரத் சந்திப்பு

கொழும்பு, மே 1

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் ரூவன் ஜேவியர் அசார் ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பரஸ்பர நலன்களுக்காகவும், உறவுகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும் இஸ்ரேலுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திடீரென சேவையை நிறுத்திய தனியார் பஸ்களுக்குத் தடை!

யாழ்ப்பாணம், மே.1

சேவையை முன்னறிவித்தலின்றி நிறுத்தி, பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்திய, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு தனியார் பேருந்துகளின் வழியனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும் குறித்த தனியார் பேருந்துகள் தமக்குரிய சுழற்சி முறையிருந்தும், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி தமது சேவையைத் தன்னிச்சையாக இடைநிறுத்தியுள்ளன. இதனால், பேருந்துநிலையத்தில் காத்திருந்த பெருமளவான பயணிகள் ஒரு நாள் முழுவதும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அதிக கட்டணங்களைச் செலுத்தி தனியார் வாகனங்களில் தமது இருப்பிடங்களுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து, முதற்கட்டமாகக் குறித்த பேருந்து உரிமையாளர்களுக்குத் தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பேருந்துகளின் வழியனுமதிப்பத்திரம் எதிர்வரும் 3ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தடை நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் குறித்த பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் வேறு எந்தவொரு பேருந்திலும் கடமையாற்றுவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. - என்றார். (க-66)



## மன்னாரில் கடலரிப்பைத் தடுக்க அபிவிருத்திக் கூட்டத்தில் முடிவு

மன்னார்,மே. 1

மன்னார் மாவட்டத்தின் நீண்டகாலப் பிரச்சினையாகவுள்ள கடல் அரிப்பைத் தடுப்பதற்கு உரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், மாவட்டத்திலுள்ள ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசியத் தேவைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் மாவட்டத்தில் இந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்படவேண்டிய திட்டங்கள், சுற்றுலாத்துறை, விளையாட்டு, வீதி அபிவிருத்தி, குளப்புனரமைப்பு, கண்டல் தாவரங்கள் அழிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. அதேவேளை மாவட்டத்தில் மிக மோசமான முறையில் மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்படுவதையும், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை இந்தத் திணைக்களம் பின்பற்றாது தான்தோன்றித்தனமாகச் செயற்படுவது தொடர்பிலும் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் ஒழுங்கமைப்பில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி அமைச்சர் ஆர்.எச்.யு.சமரசிங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள் மற்றுத் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56,60)

## த.தே.பேரவையின் மே தினக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே.1

தமிழ்த்தேசியப் பேரவையின், சர்வதேச தொழிலாளர் தினக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் வீதியிலுள்ள, இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மே 1

மீசாலை வடக்கு கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலய ( கலட்டிப் பிள்ளையார்) வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-159)

## மனஅழுத்தத்தைக் கடத்தல்; யாழில் வழிகாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 1

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் மன அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விசேட சொற்பொழிவு நிகழ்வு நாளை சனிக்கிழமை இல. 211, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகாமையிலுள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் மாலை 4 மணிமுதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் லண்டனிலிருந்து வருகைதரும் பிரபல தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளரும், ஆன்மிகச் சொற்பொழிவாளருமான பிரம்மகுமாரி ரேக்கா 'சவாலான சூழ்நிலைகளில் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ...' எனும் தலைப்பில் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் அல்லது மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் 021 222 6432, 077 233 9000 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே.1

வரணித் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறும்.

வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்களையும், கலை ஆர்வலர்களையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அமைப்பாளர் அறிவித்துள்ளார். (க-159)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அதிகாரிகளின் சந்திப்பும், அவர்களால் காரிய அனுகூலமும் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிற்பகலுக்குமேல் சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**தனுசு:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறுதடை ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கும்பம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நகர்ப்புற மக்களில்

# 30 வீதமானவர்களுக்கு கொழுப்பு கல்லீரல் பாதிப்பு!

**கொழும்பு, மே 1**

**இலங்கையின் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களில் சுமார் 30 முதல் 32 வீதமானோர் கொழுப்பு கல்லீரல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இரைப்பை குடல் விசேட நிபுணர் தெரிவித்துள்ளார்.**

இந்த நோய் பரவலாக அதிகரிப்பதற்கு நவீன வாழ்க்கை முறையே பிரதான காரணமாகக் கூறப்படுகிறது.

அதிக கொழுப்பு மற்றும் சீனி கலந்த உணவுகளை உட்கொள்ளுதல், போதிய உடற்பயிற்சி இல்லாமை மற்றும் ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றும் சூழல் என்பன இதற்கு வழி வகுக்கின்றது. கல்லீரலில் அதிகப்படியான கொழுப்புப் படிவது என்பது தனித்த ஒரு பாதிப்பு மட்டுமல்ல, அது நீரிழிவு, அதிக உடற்பருமன் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முழுமையாகக் குணப்படுத்தமுடியும். இந்த நோயிலிருந்து தற்காத்துக் கொள்ள, ஆண்டுக்கு ஒருமுறை உடற்பரிசோதனை செய்துகொள்வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கணித, விஞ்ஞான போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே.1

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியால் ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. கல்லூரியின் மாணவர்களிடையே கணிதப்போட்டி மயிலுப்பிள்ளை ஞாபகார்த்த ஸ்கந்தாவின் கணிதச்சமர் என்ற பெயரிலும், விஞ்ஞானப் போட்டி கனடா பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் ஸ்கந்தாவின் விஞ்ஞானச் சமர் என்ற பெயரில் நடத்தப்படுகின்றன. கணிதச்சமர் போட்டியில் தரம் 6 இல் எஸ்.சுஜினா, எஸ்.சறோமினி, கே.பிரசன்னா , தரம் 9 இல் எஸ். பவித்திரன்,ந.தனுயன், வி.மதுசிகன், தரம் 10 இல் எஸ்.அபிஷேக்,எஸ்.தனோஜன், வை.அஸ்னவின், தரம் 11 இல் பி.ஜதுசர்சன், ஐ.டனுஸ்ரிகா,ஆர்.பர்னவி ஆகியோர் முதலாம், இரண்டாம், மூன்றாம் என்ற நிலை அடிப்படையிலும், விஞ்ஞானச்சமர் போட்டியில் தரம் 6 இல் ச.சறோமினி,தெ.ஜெகதீஷ்,சூ.சமீனா, தரம் 9 இல் றோ.தன்ஷிகா,க.அக்ஷா, ந.தனுயன், தரம் 10 இல் ரு.ருக்சாயினி,யோ. அஸ்ணவின்,சு.தனோஜன், தரம் 11 இல் ஆர். பர்ணவி,ரி.தனுசிகன்,எல்.சதீசன் ஆகியோர் முதலாம், இரண்டாம், மூன்றாம் என்ற நிலை அடிப்படையிலும் சித்தியடைந்துள்ளனர். (க)


## அன்னதானமடங்கள் தொடர் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,மே.1

குடாநாட்டில் அண்மைக்காலமாக ஆலயத் திருவிழாக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில், அன்னதானம் வழங்கும் மடங்களை சுகாதாரப் பிரிவினர் தொடர்ச்சியாகக் கண்காணித்துவருகின்றனர். அன்னதான மடங்களில் சமையல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கட்டாயம் சுகாதாரப் பிரிவினரிடம் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் சமையல் செய்யும் இடங்களில் சுகாதார விதிமுறைகள் கட்டாயம் பின்பற்றப்படவேண்டும். தற்போது அதிகளவான ஆலயங்களின் வருடாந்தத் திருவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதாரப் பிரிவினர் இதுதொடர்பில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (சு-17)



நீர்வேலி கந்தசுவாமி கோயில் வேட்டைத்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் வடக்கு நாச்சிமார் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடைபெற்றது. தொடர்ந்து முருகப் பெருமான் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு எழுந்தருளி அங்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-17)



## நெடுந்தீவு றோ.க. ம. கல்லூரிக்கு தமிழ்ப்பாட ஆசிரியரை நியமிக்குக

### பெற்றோர் போராட்டம்


யாழ்ப்பாணம், மே 1

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரிக்குத் தமிழ்ப்பாட ஆசிரியரை நிரந்தரமாக நியமிக்கக்கோரி பெற்றோர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பாடசாலை முன்பாக நேற்றுமுன்தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் சாதாரணதர வகுப்புகளின் தமிழ்ப்பாடத்துக்கான ஆசிரியர் இரண்டு தினங்கள் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியிலும், மூன்று தினங்கள் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்பித்தலுக்காக இணைக்கப்பட்டிருந்தார். தற்போது அந்த ஆசிரியர் முழுமையாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நெருங்கி வரும் வேளையில், தமிழ்ப்பாட ஆசிரியர் இல்லாததால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் ஆகியோருக்கு கோரிக்கைகள் அடங்கிய மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-66)



நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க)



படங்கள்: ஐ.சிவசாந்தன்

## 1000 கிலோ மஞ்சளுடன் சந்தேகநபர் கைது

புத்தளம், மே 1

சட்டவிரோதமான முறையில் வரியின்றி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவிப் பகுதியில், புத்தளம் பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சந்தேகநபரிடமிருந்து 994 கிலோ 150 கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லூரில் பூரணை உற்சவம்

யாழ்ப்பாணம், மே 1

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் சித்திரா பூரணை உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு தேரடியில்விஷேச பூசை, 9.45 மணிக்கு காலை சந்திப் பூசை, முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப்பூசை என்பன இடம் பெறும். (க)

## 49 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## குமரையா தேவராஜன்

மே மாதமே

**தோற்றம்** 05.07.1950 — **மறைவு** 01.05.1977

ஏழு ஏழு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டகலா
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் பிரார்த்திக்கும்

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டி மற்றும் உற்றார்,
உறவினர்கள்.

இல.26, சோமசுந்தரம் அவனியு,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(61334)A

## மரண அறிவித்தல்

பிறப்பு 05.03.1941 — இறப்பு 25.04.2026



### இராசா செல்வமாணிக்கராசா

**(இலங்கை புகையிரத திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)**

நல்லூர் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா செல்வமாணிக்கராசா (இலங்கை புகையிரத திணைக்கள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த (25.04.2026) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா அன்னம்மாவின் மகனும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி இரத்தினத்தின் மருமகனும், காலஞ்சென்ற பாலச்சந்திராவதியின் அன்பு கணவரும், விமலா, லகிலா, தினேஸ்ராஜன் ஆகியோரின் தந்தையும் ஆவார், தனேஸன், மயூரா ஆகியோரின் மாமனாரும், ஸ்ரெபன், சுவாதி, சுஜன், ரீனா, சுவின், ஸ்ரிரா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராசசுந்தரம், சரஸ்வதி, இராசலட்சுமி, இராசமலர், யோகநாதன், இராஜேஸ்வரி மற்றும் செல்வமலர், ராஜகாந்தினி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, இராசதுரை கந்தசாமி மற்றும் ஸ்ரீபாலதேவி, வாமதேவன், தவபாலன் மற்றும் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் தியாகராஜா, வரதலட்ஷமி, காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் இந்திராணி, மற்றும் காலஞ்சென்ற தெய்வேந்திரன் சத்தியகலா மற்றும் பத்மாகரன் பத்மலோகினி ஆகியோரின் மைத்துனரும், ஜெயபாலன் மற்றும் காயத்திரி ஆகியோரின் மாமனாரும், கோபிநாத், கஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்,


அன்னாரின் பூதவுடல் இன்று (01.05.2026) வெள்ளிக்கிழமை இல.02, முதலியார் ஒழுங்கை நாவலர் வீதியில் உள்ள இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் தகனகிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**தினேஸ்ராஜன் 071 2056 677**

(CS 31715)A

## மரண அறிவித்தல்



மலர்வு 02.12.1946 — உதிர்வு 30.04.2026

### கனகசபை பஞ்சரத்தினம்

ஒட்டுமடம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பஞ்சரத்தினம் அவர்கள் நேற்று (30.04.2026) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஒட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், ஒட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - அம்பிகாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவேணி அவர்களின் ஆருயிர் கணவரும், மயூரன் (முகாமைத்துவ உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நெடுந்தீவு), வசீகரன் (மாநகர சபை உறுப்பினர் - யாழ்ப்பாணம்), சசிகரன் (முகாமையாளர், RK Motors), சுதாகரன் (தேசிய சேமிப்பு வங்கி - வடபிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்), துஷ்யந்தன் (சுதா ஸ்ரோர்ஸ், புத்தளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாசினி (ஆசிரியர் - யாழ் இந்து மகளிர் கல்லூரி), தர்சிகா, சுகாசினி, ஹஷ்தனி (வைத்தியர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை), ஜெயசுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், கருணிகா, தாரிகா, அட்சயா, அபிநயா, சாருஜன், சானுசன், ரிஷாரா, அக்சரா ஆகியோரின் ஆசை அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2026) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**472, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0771877206 (மகன்)**
**0212215513**

(CS 31712) A

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## பளைநகர பேருந்து தரிப்பிட மேல்மாடிக்கடை
## இல BUS - 05 நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான
## மீள்கேள்வி அறிவித்தல் - 2026

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 04.05.2026 தொடக்கம் 17.05.2026 வரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 18.05.2026 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 18.05.2026 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 1,032,000.00 | 15,500.00 | 2,000.00 |

**நியந்தனைகள் :**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லு படியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூக மளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 18.05.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரச உத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப் பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

**01.05.2026.**

(cr.47469) N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஓம் சக்தி


சரவணை கர்ணந்தோட்டம்

மத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

ாபுர சகித நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

ஷேக விஞ்ஞாபனம் - ௨௦௨௬

ழமை காலை 09.05 மணி முதல் 10.25 மணி வரை



### தின் வரலாறு

திருநாட்டின் தெற்கே அமையப்பெற்ற ஊர்காவற்றுறை மத்தின் கிழக்கு பகுதியிலும், சரவணை கிராமத்தில் மேற்கு இவ்வாலயத்தின் வரலாற்றை நோக்குவோமாயின் எமது ன உறுதியின் பிரகாரம் 1875 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ந்த இரு குடும்பங்கள் இடையே (கட்டையர், நெட்டையர்) மைந்துள்ள பகுதியில் பசுமாடுகளின் உரிமையர் ஏற்பட்ட இரவு முருகன் கனவில் தோன்றி இதன் பிரயட்சித்தமாக வேண்டும் எனக்கூறியதற்கு அமைவாக நல்வர்களின் ாறு உண்டு. கர்ணந்தோட்டம் நாரந்தனைக் கிராமத்தின் மற்குப்பக்க எல்லைகள் அமைந்துள்ள காரணமாக இரு கிய காரணத்தால் நாரந்தனை சரவண கர்ணந்தோட்டம் பெற்று விளங்கிவருகிறது. மேற்குறிப்பிட்ட குடும்பங்களில் மரித்து நித்திய பூசைகள் சிவஸ்ரீ நாகலிங்கஐயரின் கது. இவ்வாறு பராமரிக்கப்பட்டு ஆலயம் வளர்ச்சியடைந்து ரந்தனை சரவணைக் கிராமத்தைசேர்ந்த மக்கள் 21 பேர் ஆலோசனையில் ஈடுபட்டனர் அனைவரது கருத்துக்களை ானித்து பரிபாலனசபை உருவாக்கி நிர்வாக சபையினர்

னசபை பொறுப்புக்களை பெற்று ஆலயம் புனரமைக்கப்பட்டு பம் வளர்ச்சி அடைந்து நித்தியபூசைகள் நாகலிங்க ஐயரின் ாயில் காலப்போக்கில் 1982 ஆம் ஆண்டு மிகப்பெரிய பிரகாரம் கர்ணந்தோட்டக் கந்தனுக்கு புதிய சித்திரத்தேர் ட்டத்தில் தீர்மானித்து தேர்த்திருப்பனிச்சபை உருவாக்கம் பட்டு தேருக்குரிய அச்சுரற்றப்பட்டு அமரர் அராலியூர் ர்த்தேர் அமைய வழிவகுக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு ரும் இடம்பெயர்ந்து சென்றவேளையில் எம்பெருமானின் ளையில் 1996 ஆம் ஆண்டு வைகாசியில் ஏற்பட்ட மிளக் குடியமர்ந்தனர் அவர்களின் ஒத்துழைப்புடன் 1996 ஆம் கும்பாபிஷேகம் செய்து வழிபடத்தொடங்கினர். அதன் பின் பாபிஷேகம் நடைபெற்று அதன்பின் தேர் வேலைகள் டம் நடைபெற்று எம்பெருமான் சித்திரத்தேரில் பவணி ப்பணிகள் நடைபெற்று. புதிய வசந்த மண்டபம் சுற்றுப் ண்டு குப்பாபிஷேகம் நடைபெற்று அதன் பின் பொதுச்சபை ணிச் சபை அமைத்து வேலைகள் நடைபெற்றது. ஆலய ண்டு கும்பாபிஷேகம் செய்ய அந்தனப் பெருமக்கள் திகதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

### வாழ்த்துச் செய்தி



யாழ் குடாநாட்டு மக்களின் சைவ சமய பண்பாட்டையும், கலாசாரத்தையும், கலைகளையும், தெய்வீகத் தன்மைகளுடன் வளர்த்துவரும் சீர்மேவும் அருள்மிகு நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின், திருப்பணிகள் யாவும் இனிதே நிறைவேற்றப்பட்டு, இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியிருப்பது நாரந்தனை மக்கள் செய்த தவப்பேறாகும். ஆகம முறைப்படி யாகசாலைகள், ஹோம குண்டங்கள் அமைத்து எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை அன்போடு அழைத்து, மந்திரம், கிரியை, பாவனை ஆகியவற்றினால் கும்பங்களில் எழுந்தருளச் செய்து வேதம், சிவாகமம், ஸ்தோத்திரங்கள், திருமுறைப் பாராயணங்களினால் இறைவனை மகிழ்வித்து, பிரார்த்தனை செய்து கும்பத்தீர்த்தங்களிலே உறையும் அத்தெய்வீக அத்தெய்வீக சக்தியை பிம்பங்களிலே அபிஷேகித்து திருவருளை நிலைநிறுத்துதல் மஹா கும்பாபிஷேகமாகும். இந்த வகையில், இம் மஹா கும்பாபிஷேக விழா, நாராந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருளினாலே இனிதாக இடம்பெறவும், இம் மஹா கும்பாபிஷேக விழாவினை நடாத்திக் கொண்டிருக்கும் அந்தண சிவாச்சாரியார்கள், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் இந் நிகழ்வைத் தரிசித்த அடியார்கள் எல்லோரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வங்களும் பொருந்த, மண்ணில் நல்ல வண்ணம் சகல ஐஸ்வர்ய திருவருள் கடாச்சத்துடன் வாழவும் வேண்டி, எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**ஆளுநர், வடமாகாணம்**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஈழமணித்திருநாட்டின் மகுடமாய் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தின் நாரந்தனை, சரவணை சுவாமி கோவிலில் இடத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய எழுந்தருளியுள்ள எம் பெருமான் முருகனுக்கு இன்று குடமுழுக்கு. இதனையொட்டி பத்திரிகையிலே பிரசுரிக்கப்படவுள்ள சிறப்பு மடலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். நாரந்தனை கிராமத்தில் அமைந்துள்ள ஒரு பழமையான ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதுடன், அப்பகுதியின் மிக முக்கிய முருகன் வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது. கும்பாபிஷேகங்கள் ஆலய வளர்ச்சியில் ஒரு படித்தளங்களாக அமைகின்றன. அந்த வகையில் பழமையும் பெருமையும் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் இவ்வாண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது காலத்தின் தேவையும் முருகப் பெருமானின் திருவருளும் ஆகும். ஆலயங்கள் ஒரு கிராமத்தின் பெருமைக்கும் புனிதத்திற்கும் காரணமாக அமைவன. அதேபோல் ஆலயங்களில் நிகழ்த்தப்படும் கும்பாபிஷேக கிரியைகள் அவ்வாயலங்களையும் ஆலயச் சூழலையும் புனிதமடைய வைப்பதுடன் அக்கடமையில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களையும் ஆற்றுப்படுத்த வல்லன. "கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க சரவணைப் பதியிலே நிறைந்த அடியார்கள் மத்தியில் இவ்வாலயமானது புதுப்பொலிவோடு கட்டப்பட்டு ஆன்மீக நாட்டத்தின் அடித்தளமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தில் நிகழும் கும்பாபிஷேகமானது பிரதேச மக்களின் இறை நம்பிக்கைக்கு மெருகூட்டுவதோடு, இறை ஆசிகளையும் அடியவர்களிற்கு நல்கும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில், புதுப்பொலிவு பெறும் ஆலயத்தில் முருகப் பெருமானின் திருவருள் எங்கும் நிரம்பி கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ம.பிரதீபன்,**
**மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.**

### ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்து செய்தி



"நாள் என் செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடி வந்த
கோள் என் செய்யும் கொடுங் கூற்றென் செய்யும்
குமரேசர் இரு தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருளை சொரூப நிலையில் இருந்து தடத்த நிலைக்கு கொண்டு வந்து ஆலயம் அமைத்து இறைவனை உருவநிலையில் வழிபாடு ஆற்றுவதன் முதற்படி நிலையே மகாகும்பாபிஷேகம் ஆகும். சிவாகமங்களும் அவற்றின் வழிவந்த பத்ததிகளும் ஆலய வழிபாட்டு நெறிமுறையை கர்ஷணம் பிரதிஷ்டை உற்சவம் பிராயிச்சித்தம் என நான்குவகைக்குள் உள்ளடக்குகின்றன.இங்கு மகா கும்பாபிஷேகம் என்பது பிரதிஷ்டை என்ற பரப்பினுள் செழிக்கவும் கிராமத்தின் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகவும் பழைய ஆலயங்களை புதுப்பித்து இறைவனின் சானித்தியம் நிறைவாக அப்பிரதேச மக்களுக்கு கிடைப்பதற்காக பன்னிரண்டு வருடங்களிற்கு ஒருமுறை மகாகும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த வகையில் இப்பதியில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவதை வாரிவழங்கும் சிவகுமாரராகிய வள்ளி தெய்வயானை உடனுறை சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு பார்பவ வருடம் சித்திரை மாதம் பௌர்ணமியுடன் கூடிய சுவாதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேம் நடைபெறுவது சிறப்பிற்குரியது. சுமார் இருநூறு வருட பழமை வாய்ந்த கருணைக்கடலாகிய பெருமான் ஆலயத்தின் வரலாறு பெருமைக்குரியது ஆயிரத்துதொளாயிரத்து நாற்பதாம் ஆண்டு இவ்வாலயத்தை பரிபாலன சபை பொறுப்பேற்றதை தொடர்ந்து இவ்வாலயம் காலத்திற்கு காலம் வளர்ச்சி கண்டு வருவது சிறப்பிற்குரியது ஆலய பரிபாலனத்தாரும் உபயகாரரகள் மற்றும் முருகன் அடியவர்களின் அயராத உழைப்பும் இவ்வாலயம் வளர்ச்சி அடைவதற்கு சான்றாக அமைந்தது இதனை தான்." மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பாரபரமே என தாயுமானவர் பராபரக் கண்ணியிலே கூறுகின்றார். திருநாவுக்கரசர்
"திருக்கோயிலில்லா திருவிலிலூரும் .......
ஆவை எல்லாம் ஊரல்ல அடவி காடே"
என்று தனது திருமுறையிலே பாடுகின்றார். இதிலிருந்து ஓர் ஊருக்கு ஆலயம் எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகின்றது. எனவே இன்றைய நாளில் இவ்வாலயத்தை புனரமைத்து கும்பாபிஷேக திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருள் நிறைவாக கிடைக்கவேண்டி வாழ்த்து கூறி நிற்கின்றேன்.
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**திருமதி வனஜா செல்வரட்ணம்**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

### வேலணைப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தில் நாரந்தனையில் அமைந்துள்ள சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி என்னும் திருப்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளித் திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெறவுள்ள புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனத்தை ஒட்டிய சிறப்பு மலர் வெளிவருவது குறித்து மகிழ்ச்சி யடைகின்றேன். இம்மலர் இவ் ஆலய வரலாறு, மரபுகள், சிறப்புக்கள் முதலியவற்றை ஆவணப்படுத்துவதுடன் சமயம் தொடர்பான கட்டுரை களையும் தாங்கி வடிவமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பலநூற்றாண்டுகள் பெருமை வாய்ந்த, அற்புதங்கள் நிறைந்த பாலசுப்பிரமணியரின் வரலாறு இம்மண்ணின் வரலாற்றில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும். எம்மை எல்லாம் உலகில் இயங்க வைத்துக் கொண்டிருக்கும் இறைசக்தியை விட மேலானது வேறெதுவும் இல்லை என்றவகையில் ஆன்மீகப் பேரருளைப் பெற நாமெல்லாம் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையார் கூற்றுக்கு இணங்க ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோயிலை நாடிச் செல்கின்றோம். அழகும், இளமையும் பொருந்திய பாலமுருகனை வழிப்பட்டு அனைவரும் நலம்பெற வேண்டும் என்பதே அனைவரினதும் பேரவா. அடியார்களுக்கு ஏற்படும் வினைகளையும், நோய்களையும், அஞ்ஞானத்தினையும் தீர்க்கும் தெய்வங்களில் மக்கள் மனதில் இறை நம்பிக்கையை ஏற்படுத்தும் தெய்வமாக சிவ மைந்தனான சுப்பிரமணியர் விளங்குகிறார். முருகனின் அருட்சக்தியை அதிகரிக்க இக் கும்பாபிஷேகம் உதவும் என்பதில் ஐயமில்லை. இந்தவகையில் ஆலயங்கள் மக்கள் மத்தியில் ஆன்மீகத் தத்துவங்களைப் புரிந்துகொள்ள வைப்பனவாகவும், பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணும் நிலையமாகவும் விளங்குகின்றன. இவ் ஆலயம் அன்பர்களின் உதவியினால் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுகின்றமையும், அதனை ஒட்டி மலர் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் அரும்பாடுபட்ட ஆலய நிர்வாகசபையினருக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் வெளியிடவுள்ள கும்பாபிசேக மலர் சிறப்புறவும் எனது பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**திரு. த. அகிலன்.**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வேலணை.**

### வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டின் வடபகுதியில் நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டத்தில் அமர்ந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ வள்ளிதேவசேனாதி சமேத சிவசுப்பிரமணிய சுவாமியின் திருத்தலம் கும்பாபிஷேக பெருவிழா காண்கின்றது. நாங்கள் பிறந்து வளர்ந்த, எங்களை வளர்த்த கிராமத்தில் வானளாவிய கோபுரத்துடன் எங்களுடைய ஆலயம் வளர்ந்து நிற்பது கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் தரும். கோயில்களில் கும்பாபிஷேகம் காண்பது நாம் செய்த புண்ணியம். அந்தவகையில் ஆலயத்தை மிக சிறப்பாக பரிபாலனம் செய்து இன்று கும்பாபிஷேக பெருவிழா எடுக்கும் அளவிற்கு வளர்த்தெடுத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் ஆலயத்தில் சிறப்பாக பூசைகளை நடத்தி வரும் சிவச்சாரியருக்கும் ஆலயம் சிறப்பாக அமைய வளங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற முருகன் அடியார்களுக்கும் எம்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிராத்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.
"அஞ்சு முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும் வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும் நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவர் முன் "

**எம்.ஜி.காண்டீபன்,**
**பிரதான உள்ளக கணக்காய்வாளர் .**
**வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு.**

## ஆலய பரிபாலன சபையும்,
## இராஜ கோபுர திருப்பணிச் சபையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை வீழ்த்தி குஜராத் அணி அபாரம்




**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரைத் தோற்கடித்து புள்ளிப்பட்டியலில் நம்பிக்கையான இடத்தைத் தக்கவைத்தது குஜராத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 155 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக படிக்கல் 40 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அர்ஷத் கான் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணி 25 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களை இழந்து 4 விக்கெட்டுகளால் வென்றது. அதிகபட்சமாக அணித்தலைவர் கில் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் புவனேஸ்குமார் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (ம)

**வீடு வாடகைக்கு விடப்படும்**

யாழ்ப்பாணம், நல்லூரிற்கு அருகாமையில் அமைந்துள்ள 2 அறைகள் கொண்ட வீடு தளபாட வசதிகளுடன் மாணவர்கள், தொழில் புரிபவர்கள், நிறுவன ஊழியர்கள் குழுவாகத் தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0759799161/0778864868

(CS31713) A

**வீடு வாடகைக்கு**

வவுனியா தோனிக்கல்லில் 4 அறைகள் கொண்ட வீடு (அனக்ஸ்) சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. முற்பனம் 2 இலட்சம். வாடகை 15,000/=

தொடர்பு: 075 038 1389

(CS31714) A

# 21 மாவட்டங்களில் மேதினப் பேரணி!

## தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு

கொழும்பு, மே 1

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தி 21 மாவட்டங்களில் 21 மேதினக் கூட்டங்களையும் பேரணிகளையும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தி 21 மாவட்டங்களில் 21 மேதினக் கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தவுள்ளது. இதில், நுவரெலியாவில் நடைபெறும் விசேட மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

மே தின வரலாற்றில் அரசியல் கட்சியொன்று ஒரே நாளில் 21 மாவட்டங்களில் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்துவது இதுவே முதல்முறையாகும்- என்றார். (ம)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில்
33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 1 1/2 பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- யாழ் பஸ் நிலையத்திலிருந்து 4 km தூரம்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம், பின்பகுதி 10 லட்சம்.
- திருமண மண்டபம் அமைப்பதற்கும், கடைகள் கட்டுவதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

# மரண அறிவித்தல்



பிறப்பு: 08.06.1940 இறப்பு : 30.04.2026

## லில்லி அக்னஸ் சிறில்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லில்லி அக்னஸ சிறில் (லூர்த்தம்மா) அவர்கள் நேற்று (30.04.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் - மாக்கிறேற் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சிறில் (ஓய்வுபெற்ற மாவட்ட பரிசோதகர் - இலங்கை புகையிரத திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மேரிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், றிச்சி லக்ஷ்மன் (ஜேர்மனி), ஐறின் லக்ஷ்மி (ஓய்வுநிலை நடன ஆசிரியை - சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகஜோதி (ஜேர்மனி), அன்ரன் பிறின்ஸ் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா வடக்கு பிரதேச சபை), கீர்த்தாஞ்சன் (பொறியியல் பீட மாணவன் - ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஜுலியா (ஜேர்மனி), பெனோ (ஜேர்மனி), மதனராஜன் (KM Photography) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற விக்ரர் திரேசம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித யுவானியார் ஆலயத்தில் இன்று (01.05.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, திருவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 633 9615 (மகள்)
077 400 2383 (மருமகன்)

466/2, புனித யுவானியார் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(CS31718) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி...

பெறவுள்ளது. நாளை சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் நாகபுஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தத் திருவிழாவும், நாளை மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறுமென ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## தீயில்...

அராலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த கைலாயப்பிள்ளை கமலேஸ்வரி (வயது-79) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த மூதாட்டியின் இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில், அவர் பணிப்பெண் மூலம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளார். வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் நேற்றுப் பலதடவைகள் அவருக்கு அழைப்பு மேற்கொண்டபோதும் அவரை தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அயலவர்களுக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, அவர்கள் அங்குசென்று பார்த்தபோது தீயில் கருகிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். சடலத்துக்கு அருகில் மண்ணெண்ணெய் கொள்கலன்களும் காணப்பட்டுள்ளன. அத்துடன், வீட்டின் உள்ளே மின் விசிறியில் கயிறு ஒன்று அறுக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற அவர்கள் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## திஸ்ஸ...

திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களுக்கு மீளவும் கையளிக்குமாறு வலியுறுத்தியும் ஒவ்வொரு மாதமும் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. நேற்று மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெற்ற நிலையில், அதன் தொடர்ச்சியாக இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையும் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. நேற்றைய போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26-66)

## என்புத்...

என்புத் தொகுதி அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டது. இதையடுத்து, செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 241 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அவற்றில் 240 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன் , சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மண்...

எது என சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழியில் சர்ச்சைக்குரிய மண்படுக்கைகள் இருந்தமை நேற்று அவதானிக்கப்பட்டு, அது தொடர்பில் நேற்றும் அதன் தொடர்ச்சியாக இன்றும் ஆய்வுப் பணிகள் இடம் பெற்றன. இன்றையதின ஆய்வு நடவடிக்கையின்போது புதைகுழிக்குள் இருந்து நாணயக் குற்றியொன்று மீட்கப்பட்டுள்ளது. அடுத்தகட்ட ஆய்வு நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இந்த விடயம் தொடர்பில் உறுதியான தகவல்களைத் தெரிவிக்க முடியும் - என்றார். (அ-ம-26)

## சட்டத்தரணியாக...

சிறைத்தண்டனை அனுபவித்த பேரறிவாளன், விடுதலைக்குப் பின்னர் சட்டக்கல்வியைப் பயின்று அண்மையில் சட்டத்தரணியாகப் பதவியேற்றார். இதையடுத்தே, பேரறிவாளன் சட்டத்தரணியாகச் செயற்படுவதற்கு காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மக்களவை உறுப்பினர் சுதா தெரிவித்ததாவது:-

பேரறிவாளன் ஒரு சாதாரண குற்றவாளி அல்ல. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்ட கொடுங்குற்றவாளி. எனவே, இந்திய நீதிமன்றங்களில் அவர் சட்டத்தரணியாகச் செயற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால், இந்த நியமனத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும்.

பேரறிவாளன் குற்றமற்றவர் என்று கூறி விடுவிக்கப்படவில்லை. மாறாக, கருணை அடிப்படையில்தான் விடுவிக்கப்பட்டார். அவர் வழக்கறிஞராகப் பதவியேற்றமை தவறான முன்னுதாரணமாக அமைந்துவிட்டது. பேரறிவாளன் சட்டத்தரணியாகப் பதவியேற்ற நாள் இந்திய சட்டக் கட்டமைப்பில் ஒரு கறுப்பு நாள் - என்றார். (அ-ம)

## இன்று...

மான முறையில் முன்னெடுக்கப்படும் பாரம்பரிய, பண்பாட்டு, கலாசார நிகழ்வான வல்வை இந்திரவிழா இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்திரவிழாவை அலங்கரிக்கும் முகமாக சில கிலோமீற்றர்கள் நீளத்துக்கு வாழை மரங்கள் மற்றும் வர்ண விளக்குகள் அலங்காரத்துடன் வானூர்தி கட்டவுட்டுகள், வானுயர் முப்பரிமாணப் பொம்மைகள், நூற்றுக்கும் மேற்பட்ட இராட்சத புகைக்கூண்டுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், நீர்நடன நிகழ்வுகள், பத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நடன நிகழ்ச்சிகள், பொம்மலாட்ட நிகழ்வுகள், சிலம்பாட்ட நிகழ்வுகள், கணிதப் புதிர்ப் போட்டிகள் போன்றவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-66-26)

## பரந்தனில்...

பரந்தன் நகர்ப் பகுதியிலேயே இந்த மினிசூறாவளி ஏற்பட்டுள்ளது. இதனால் வர்த்தக நிலையங்கள், சந்தை மற்றும் சில வீடுகளில் கணிசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் மேற்கூரைகள் புயலால் பிடுங்கிச் செல்லப்பட்ட நிலையில், பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மழையின் நனைந்து நாசமாகியுள்ளன. (அ-ம-113)

## பனங்கூடலில்...

வழக்கை காரணமாக பேரழிவு தவிர்க்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்பளை, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பின்வீதியில் உள்ள பனங்கூடலில் நேற்று பிற்பகல் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதேச மக்கள் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சுமார் இரண்டரை மணிநேரமாகப் பற்றியெரிந்த இந்தத் தீயால், அண்ணளவாக 30 பனைகள் முற்றாகவும், மேலும் கணிசமான பனைகள் பகுதியளவிலும் நாசமாகியுள்ளன. இந்த அசம்பாவிதம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-100)

## 2 சந்தேக...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் தயாளினி திலீபன் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்டு, உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவரின் மகளும், மருமகனும் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வழிகாட்டலில் சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷானும், விரிவுரையாளரின் மருமகன் சார்பில் சட்டத்தரணி சர்மினியும், விரிவுரையாளரின் மகள் சார்பில் சட்டத்தரணி சமந்த அத்துக்கோரளவின் வழிகாட்டலில் சட்டத்தரணி கௌதமனும் ஆஜராகினர். நேற்றையதினம் மரண விசாரணை இடம்பெறவிருந்த நிலையில், பொலிஸார் அதற்குத் தயாரில்லை என்பதால் அந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை கொலைசெய்யப்பட்ட விரிவுரையாளரின் கார் மற்றும் நகைகளை முறைப்பாட்டாளரான மகனிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (அ-ம-26)

## தனியார்...

பட்டுள்ளது. புலோலி பொதுச்சுகாதார பரிசோதகர் கந்தசாமி கிருஸ்ணரட்சகனால் தொடரப்பட்ட இந்த வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, நுளம்பு பெருகக்கூடியவாறு கழிவுநீரை வெளிச்சுற்றாடலுக்கு அப்புறப்படுத்திய குற்றச்சாட்டை மருத்துவமனைத் தரப்பு ஏற்றதைத் தொடர்ந்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-100-422)

## வீதியைக்...

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் உரித்துடைமைக்கு உட்பட்ட தையிட்டி பவானி வீதியைத் தடைசெய்து தாங்கள் எல்லையிட்டுள்ளீர்கள். எனவே, அந்த எல்லையை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் அகற்ற வேண்டும் என்று தங்களுக்கு 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் 59(1) பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த வீதியை சேர்த்து எல்லையிட்ட இடப்பரப்புக்கான உறுதிகளையும் ஆவணங்களையும் பரிசீலனைக்காக வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

தவறும் பட்சத்தில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் 59(2) பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும். தாங்கள் எல்லைகளை அகற்ற மறுத்து, அவை பிரதேசசபையால் அகற்றப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் செலவு தங்களிடம் இருந்து அறவிடப்படும். அத்துடன், தாங்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படவும் நேரிடலாம் என்பதையும் அறியத் தருகின்றேன் - என்றுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் தையிட்டி காணி அளவீட்டுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது பவானி வீதி தவிசாளரால் அடையாளம் காட்டப்பட்டது. இதற்கு அமையவே தற்போது அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வலி.வடக்கு பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. தவிசாளரின் நடவடிக்கைக்கு சபையினர் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜெயம்

## றியல் எஸ்ரேட்

## (பிறைவற்) லிமிட்டட்டின்

## 8வது ஆண்டினை முன்னிட்டு

2019ம் ஆண்டு வைகாசி மாதம் 01ம் திகதி முதல்
இல.906 பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில் இயங்கிவந்த
**“ஜெயம் றியல் எஸ்ரேட் (பிறைவற்) லிமிட்டட்**
**Jeyam Real Estate (PVT) Limited**
என்ற எமது நிறுவனமானது
**2026ம் ஆண்டு வைகாசி மாதம் 01ம் திகதியில் இருந்து**
**இல.151/4, இராசபாதை வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் நிரந்தர முகவரிக்கு
மாற்றம் செய்யப்பட்டு தனது நிரந்தர அலுவலகமாக
இயங்க இருப்பதனை இதுவரை காலமும்
எம்முடன் பயணித்தவர்களுக்கும், எம்முடன்
இனிவரும் காலங்களில் பயணிக்கவிருக்கும்
எம் இனிய உறவுகளுக்கும் இவ் இனிய
செய்தியினை கூறிநிற்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**ஜெயம்**
**0778147389- சிவா**
**0779865457- சதீஸ்**
**0778051655- ஜெயம்**

(CS31717) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில்01.05. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.